வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி– 620002

# நிர்மலா சுரேஷின் இலக்கியப்பணியும் அரசியல் பணியும்

**மெ.சித்திரைச்செல்வி**

முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)

தூய வளனார் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச் சுருக்கம் :**

கிறிதிதவ இலக்கியங்கள் குறித்தும் கிறித்தவப் படைப்பாளர்கள் குறித்தும் தமிழில் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. கிறித்தவ அறிஞர்களில் ஒருவரான நிர்மலா சுரேஷ் அவர்களின் தமிழ்ப் பணிகள் குறித்தும், ஊடகப் பணி குறித்தும் மற்றும் அரசியல் பணிகளே இக்கட்டுரையின் பாடுபொருளாகும்;.

**திறவுச் சொற்கள் :**

1.பிஞ்சு விரல்

**கிறித்தவத் தமிழ் அறிமுகம் :**

ஒவ்வொரு சமயமும் கருத்துக்களையும், மரபுகளையும், உணர்களையும், புலப்படுத்தி நிர்கின்றன. இவ்வகையில் கிறித்தவக் கோட்பாடுகள், தத்துவங்கள், நம்பிக்கைகள், வழிபாடு, பக்தியுணர்வு ஆகியவற்றை புலப்படுத்தும் முறையை, மொழிப்பாங்கை கறித்தவத் தமிழ் எனக் கூறுகிறோம். தமிழை ஒரு கிளைமொழி என்று சொல்லத்தக்க அளவிற்கு தனித்தன்மையுடன் விளங்குகின்றது. கிறித்தவர்களின் படைப்புகளில் மட்டுமின்றி, அவர்தம் அன்றாடச் சமூகச் செயற்பாடுகளிலும் கிறித்தவத் தமிழ் கூறுகள் இடம் பெறுவதைக் காண்கிறோம். ஒரே மொழி பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் முறையில் நேரும் மாறுபாட்டை மொழியியலார் துறை வழக்கு என்று குறிப்பிடுவதையொட்டி கிறித்தவத் துறைவழக்காகக் கருதலாம்.

**முன்னுரை:**

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாய் விளங்கும் தஞ்சையில் மிகச்சிறந்த கிறித்தவப் படைப்பாளர்களில் பெண் படைப்பாளராகத் திகழ்ந்தவர் நிர்மலா சுரேஷ் ஆவார் இக்கவிஞரின் வாழ்வியல் செய்திகளையும் இலக்கியப்பணியையும், அரசியல் மற்றும் ஊடகப் பணிகளையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**வாழ்வியல் :**

தானியங்களின் களஞ்சியக் கிடங்காக விளங்கும் தஞ்சையில் நிh;மலா சுரேஷ் என்பவர் பதினெட்டு ஆறு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதில்; இருதயராஜ் ரெஜினா தம்பதியருக்கு இரண்டாவது குழந்தையாக பிறந்தார்

**கல்வி :**

திருச்சியில் பள்ளிபடிப்பையும், கல்லூரிப் படிப்பை புனித சிலுவை கல்லூரிலையே பயின்றார். பொருளாதாரத் துறையில் இளங்கலைப்பட்டமும் தமிழில் முதுகலைப்பட்டமும் கல்வியியல்(பி.எட்)பட்டமும் பெற்றார் சென்னை பல்கலைக் கழகத்தில்(ஆய்வியல் நிறைஞர்(எம்.பில்)பட்டமும் பெற்றார் மேலும் அதனைத் தொடர்ந்து முனைவர் பட்டத்தையும் அப்பல்கலைக் கழகத்திலையே பயின்றபோது அம்முனைவார் பட்டத்திற்கு எடுத்துக்கொண்ட தலைப்பு‘ ஹைக்கூக் கவிதைகள் ஆகும். இக்கவிதை ஜப்பானியக் கவிதை வடிவத்தை ஒத்ததாகும்.

**இலக்கியத் தொண்டு:**

இலக்கிய உலகிற்கு கவிஞராக அறிமுகமானார் கல்லூரியில் படிக்கும் போதே அவருடையப் படைப்பாக்கத் திறனால் கவிதைகள் மற்றும் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கவிதைகள் அமுதசுரபி, கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன், குங்குமம், குமுதம், சாவி, தேவி,வாசுகி, பாக்யா, என்னும் இதழ்களில் வெளிவந்துள்ளது. இயேசு மகா காவியத்தை மிகச் சிறப்பாய் இயற்றியதால் கவிஞர் நிர்மலா சுரேஷ் அவர்களை கவிஞர் வாலி ‘காப்பியம்

செய்த முதல் பெண் என்று பாராட்டியுள்ளார்'. இதனைத். தொடர்ந்து சென்ரியூ, ஹைக்கூ என்ற கவிதைகளை அறிமுகம் செய்த முன்னோடியாகவும் அவர் உள்ளார். தனது படைப்பாற்றல் திறமையால் மத்தியகிழக்கு, ஜெர்மனி, கனடா போன்ற நாடுகளிலும், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். அவற்றோடு பல்வேறு இலக்கியக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். கவிஞர் நிர்மலா சுரேஷ் அவர்கள் மிகச் சிறந்தப் படைப்பாளர்களிடத்தின் பாராட்டைப் பெற்றதோடு இலக்கியத்தின் மீது கொண்டப் பற்றின் காரணமாக கவிதைகளைப் படைத்து அவற்றைத் தொகுப்பாகவும் வெளியிட்டுள்ளார்.

**கவிதைத் தொகுப்பு நூல்கள் :**

மண்ணில் பதியும் பாதங்கள், தென்றலும் தலைமை ஏற்கும், நிர்மலா சுரேஷ் கவிதைகள், பாலைவனப் பௌர்ணமிகள், எப்போதும் உதயம், சிக்கும் வில்வேர்மரம்-சென்ட்யு, தைலச் சிமிழும் தச்சன் மகனும், அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி, கடிகாரக் குயிலும் கடல் குதிரையும். இவரின் படைப்பாக்கத்தில் வெளிவந்துள்ள கவிதைத் தொகுப்புக்களில் ஒரு கவிதைத் தலைப்பை மட்டும் இவர் பெயரிலே வழங்கியுள்ளார் இக்கவிதைகளில் சமுதாயக் கருத்துக்கள் உள்ளதைக் கண்ட எழுத்தாளா; அன்னி தாமசு தமிழரின் சமூகவியலில் சில பார்வைகள் எனும் புத்தகத்தில் நிர்மலா சுரேஷ்; எழுதிய கவிதை வரிகளை மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளார்.

தலைவாப் பூச்சூடி நீதான்
தொழிற்சாலைக்குச் செல்வாயோ கண்ணே
பிஞ்சுவிரல் பஞ்சதனைப் பிரிக்கும்
தளிர்க் கைதான் தீக்குச்சி அடுக்கும்
என்று அது எழுது கோலைப் பிடிக்கும்

(நிர்மலா சுரேஷ் கவிதைகள் ப.102)

இக்கவிதையானது பஞ்சாலைகளிலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் வேலைப்பார்க்கும். குழந்தை தொழிலாளர்களின் அவலநிலையைப் பதிவு செய்கிறது. நிர்மலா சுரேஷ் ஆய்வுத் தலைப்பு நூலான ஹைக்கூக் கவிதைகள் என்னும் நூல் திருவள்ளுவர் பல்கலைக் கழக முதுகலைத் தமிழ் வகுப்பில் இக்கால இலக்கியம் எனும் பாடப்பிரிவில் பார்வை நூலாக உள்ளது. அதே பல்கலைக் கழகத்தில் இவர் எழுதிய மற்றொரு கவிதை நூலான பாலைவனப் பௌர்ணமிகள் எனும் நூல் தமிழ்த்துறை மற்றும் பிற துறை மாணவர்கள் படிக்கும் வண்ணம் எளிமையானதொரு நூலாக பயன்பட்டு வருகிறது.

**கட்டுரைத் தொகுப்பு நூல்கள் :**

மொழியும் அதன் வாழ்வும், பல்கலை ஆய்வுகள், திசைகளின் ஓசைகள், காதோடு காதாக, பூமிப் போதகன், ஆன்மிக சமய சமரச சமுதாயத் தொண்டு, எழிலாசிரியர் இருவர். கட்டுரைகளை எல்லாம் தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளார் இவர் எழுதிய முதல் கட்டுரையான மொழியும் அதன் வாழ்வும் ஆயிரத்தி தொள்ளாயிரத்து எண்பத்தி ஒன்றில் இதழ்களில் வெளிவந்துள்ளது.

**மொழி பெயர்ப்புக் கவிதைகள் :**

கவிஞர் நிர்மலா சுரேஷ் அவர்கள் மொழிபயர்ப்பு நூல்களான அரபுக் கவிதைகளுக்கு ஆர்த்தி மற்றும் ஈராக்கிய கவிதைகள் என்னும் இரு நூல்கள் எழுதியுள்ளார்.

**அரசியல் வாழ்க்கை :**

நிர்மலா சுரேஷின் தந்தை இருதயராஜ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரான காஞ்சிபுரம் நடராசன் அண்ணாதுரையின் நண்பராவார். அந்த வகையில் இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஈர்க்கப்பட்டு அதில் உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலக்கிய அணியின் மாநிலத் துணைத் தலைவராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றினார். மு.கருணாநிதி தலைமையில் பல்வேறு கவியரங்குகளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். திராவிட முன்னேற்றக்

கழகத்தின் சார்பாக ஆயிரத்தி தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்றில் மைலாப்பூர் தொகுதிச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறவில்லை. இரண்டாயிரத்தி ஆறாமாண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

**ஊடகப்பணி :**

தமிழின் முன்னனித் தொலைக்காட்சிகளிலும், கனடா, சிங்கப்பூர் தொலைக்காட்சிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கினார். சென்னைத் தொலைகாட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணிபுரிந்தார். தொலைக்காட்சியில் பல கவிதை நிகழ்ச்சிகளை நடத்தினார். ஆயிரத்தி தொள்ளாயிரத்து எண்பத்தாறில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தை செயின்ட் போப் ஜான்பால் சென்னைக்கு வந்தபோது அந்நிகழ்வின் வரவேற்புக்குழு உறுப்பினராக இருந்தார். கேளடி கண்மணி திரைப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

**ஊடகத் துறையில் வகித்த பொறுப்புகள் :**

திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர்

சோவியத் பண்பாட்டுக் கழகத் துணைத்தலைவர்

கார்டினல் நியூமன் சங்க உறுப்பினர்

ஓய்.எம்.சி.ஏ அமைப்பு உறுப்பினர்

சென்னைத் தமிழ் சங்க உறுப்பினர்

**பெற்ற விருதுகள் :**

நிர்மலா சுரேஷின் படைப்புகள் அக்காலக் கட்ட சூழலுக்கு தகுந்தார் போல சமூக சிக்கலை மையப்படுத்தி எளிமையானதொரு கருத்துக்ளை மக்களுக்கு வெளிப்படுத்தியதால் தழிழக அரசு அவரின் படைப்பை பாராட்டி பாவேந்தர் பாரதிதாசன் விருதை ஆயிரத்து தொள்ளாயித்து தொண்ணூறில் வழங்கி சிறப்பித்துள்ளது.

**மறைவு :**

உடல் நலக் குறைவால் இருபத்தி ஏழு. ஐந்து. இரண்டாயிரத்து இருபத்து ஒன்றில் கனடாவில் காலமானார்.

**முடிவுரை :**

நிர்மலா சுரேஷ் அவர்கள் அவரின் படைப்பாக்கத்தில் பன்னிரெண்டு நூல்களை எழுதியுள்ளார். இவரின் நூல்கள் பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டு எதிர்கால சமூதாயத்திற்கும் அச்சமூதாயத்தில் நிகழ்ந்துள்ள கருத்துக்களை எடுத்துரைக்கும் வகையில் இவரின் படைப்புக்கள் உள்ளன. இவரின் அரசியலில் ஊடகப் பணியிலும் சிறந்து விளங்கியவர்.

**சான்றெண் விளக்கம் :**

1. ப.டேவிட் பிரபாகர், கிறித்தவத் தமிழ் நடையியல் போக்கு, ப.1
2. nirmala-suresh.forevermissed.com
3. அன்னி தாமசு, தமிழர் சமூகவியலில் சில பார்வைகள் ப.135

**துணைநூற் பட்டியல்**

1. டேவிட் பிரபாகர் ப(2002), கிறித்தவத் தமிழ் நடையியல் போக்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600059.

2. nirmala-suresh.forevermissed.com

3. அன்னி தாமசு(2000), தமிழர் சமூகவியலில் சில பார்வைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 6000113.